தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 4, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு-2021

1990, ஆகஸ்ட் 20, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில், காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு.''

எள்ளின் பிளவைப் போன்ற சிறிய அளவு உடையதே ஆயினும் ஒரு குடியை அழிக்கவல்ல கேடு உட்பகையில் உள்ளதாகும்.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கீழ்க்கண்ட முன்னாள் உறுப்பினர்கள் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் :

(1) திரு. எம். காட்டி முத்து—மறைந்த நாள் 22–4–1990 தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலம் தனித் தொகுதி—1952 முதல் 1957 வரை உறுப்பினர்.

(2) திரு. கு. காமாட்சி—மறைந்த நாள் 21–6–1990—திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரம்பூர் தொகுதி—1971 முதல் 1976 வரை உறுப்பினர்.

(3) திரு. கே. கோபால் கவுண்டர்—மறைந்த நாள் 23–6–1990, தென்னாற்காடு மாவட்டம், சத்திய மங்கலம் தொகுதி—1957 முதல் 1962 வரை மற்றும் 1962 முதல் 1967 வரை உறுப்பினர்.

(4) திரு. என். மருதாசலம்—மறைந்த நாள் 23–6–1990, கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர்-2 தனித் தொகுதி, 1957 முதல் 1962 வரை மற்றும் பேரூர் தனித் தொகுதி, 1967 முதல் 1971 வரை மற்றும் 1971 முதல் 1976 வரை உறுப்பினர்.

(5) திரு. ஜே. மாதா கவுடர்—மறைந்த நாள் 12–8–1990 —நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, 1957 முதல் 1962 வரை மற்றும் 1962 முதல் 1967 வரை உறுப்பினர்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை, இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரம். வினா எண். 1,

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, இன்றைக்குச் சட்டமன்றம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கவனிக்க வேண்டும். வினா நேரத்தின்போது வேறு எந்த வகையான விவாதத்திற்கும் இடமில்லை. உங்களுக்கு ஏதாவது பேச வேண்டுமென்று தேவைப்பட்டால், 'நேரமில்லா நேரம்' என்ற பகுதியில்தான் பேச அனுமதி வழங்கப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா : நிகழ்ச்சி ஆரம்பிக்கும் முன்னால், உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால்தான் சட்டமன்றத்திற்கான சட்ட விதிகள் ஒழுங்காகச் செயல்படுகிறதா......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகள் செயல்படுகிறதா இல்லையா என்பதை ஆராய்வதற்கு உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. அது 11 மணிக்குப் பிறகு, சட்டப்படி, மரபுப்படி. முதலில் நீங்கள் இதைச் சரியாகச் செயல்படுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

திரு. எஸ். ஆர். இராதா : செயல்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு).